1972 மார்ச் 18]

தொழில் முனைவரே மூலதனத்தில் 20 சதவீதத்தைச் செலுத்த வேண்டும்; மீதமுள்ள 60 சதவீத மூலதனத்தை வேளாண்மை மறுநிதிக் கழகம், வேளாண்மை நிதிக் கழகம், வணிக வங்கிகள் போன்ற நிதி உதவும் நிறுவனங்களிடமிருந்து பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு, வட்டியில்லாக் கடனை அரசு வழங்கும். 30 அடி நீளமுள்ள 40 படகுகள், 32 அடி நீளமுள்ள 10 படகுகள் ஆகியவற்றைத் தொழில் முனைவர்கள் வாங்குவதற்காக 1971–72ல் ரு. 5,60,000 வட்டியில்லாக் கடனாக அளிக்கப்பட (படகு விலையில் 20 சதவீதம்) ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

வெள்ளியணைப் பகுதியில் பாய் நெசவு

* 554 வினு—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

கரூர் வட்டம், வெள்ளியணைப் பகுதியிலுள்ள தாழ்த்தப்பட்ட மக்களில் பெரும்பாலோர் பாய் நெசவுத் தொழிலில் ஈடுபட்டிருப்பதால் அங்கு கூட்டுறவு முறையில் பாய்த் தொழிலை அபிவிருத்தி செய்யத் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: இல்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, கிராமப் பொருளாதாரத்தை வளர்ப்பதற்கும், வேலைவாய்ப்பைப் பெறுவதற்கும் இதுபோன்ற சிறு தொழில்களை கிராமப் பகுதிகளில் ஊக்குவித்தால சிறப்பாக இருக்கும் என்பதால், இனிமேலாவது இதுகுறித்து தக்க நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படுமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: தலைவர் அவர்களே, கிராமப் பகுதிகளில் சிறுதொழில்களுக்கென்ற பல திட்டங்கள் அரிசன நலத் துறையின் மூலமாக நடத்தப்பட்டு வருகின்றன. குறிப்பாக பாய் நெய்கின்ற தொழிலுக்கு திருச்சியிலே மத்திய நிலையம் ஒன்று இருக்கிறது. அதன் தொடர்பாக தஞ்சாவூர், தர்மபுரி, சேலம் ஆகிய மாவட்டங்களில் பாய் நெய்யும் தொழிற்சாலைகள் நடத்தப்பட்டு வருகின்றன. எனவேதான் கரூரில் தனியாக தொழிற்சாலையை ஏற்படுத்தவில்லை.

திரு. வை. பாலசுந்தரம்: தலைவர் அவர்களே, தாழ்த்தப்பட்ட மக்கள் அதிகமாக வசிக்கிற தனித் தொகுதிகளிலே அரிசன நலத்

துறையின் மூலமாக தொழில்கள் அவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுப்பதற்கான முயற்சிகள் ஏதாவது இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: தனித் தொகுதிகள் என்று இல்லை. பெருவாரியான தாழ்த்தப்பட்ட மக்கள் எங்கெங்கு மிக மோசமான நிலையில் வாழ்கிறார்களோ அங்கேதான் தொடங்கப்படுகின்றன. தனித் தொகுதிகள் என்ற அடிப்படையில் இல்லை.

திரு. தொ. ப. சீனிவாசன்: இப்பொழுது கிராமத்தில் கைத்தொழில் சம்மந்தமாகத் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உபகாரமாக நடைபெறுகிற மாதர் நல இலாகா மூலமாக கூடைமுடைதல் இன்னும் வேறு பல தொழில்கள் நடைபெறுகின்றன. அவற்றிலே தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வேலைவாய்ப்புக் கொடுப்பதில் முதலிடம் தர அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: தாழ்த்தப்பட்ட மக்களுக்காகத் தனித்திட்டங்கள் இருக்கின்றன. அவற்றிலே தாழ்த்தப்பட்ட மக்களுக்கு முதலிடம் தரப்படுகின்றன. தாழ்த்தப்பட்ட மக்கள் அல்லாதவர்களுக்கும் ஒரு சில சதவீதம் கொடுக்கப்படுகிறது. சில இடங்களில் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக 50 சதவீதம் ஒதுக்கப்படுகிறது. தாழ்த்தப்பட்டோர் நல இலாகா மூலமாகவும், மகளிர் நலத் திட்டம் மூலமாகவும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வேலைவாய்ப்புக் கொடுப்பதில் முதலிடம் கொடுக்கப்படுகிறது.

திருமதி ஜோதி வெங்கடாசலம்: சார், மக்கள் பின்னுகின்ற பாய்கள் கைப்பொருட்கள் சந்தையிலே விற்பதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்து இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: கூடுமானவரையில் வந்தவாசி போன்ற பகுதிகளில் பின்னுகின்ற பாய்க்கு நல்ல மார்க்கெட் இருக்கிறது. மற்ற இடங்களில் பின்னப்படுகின்ற பாய்களை நலத்துறையின் மூலமாக உள்ள பள்ளிகளுக்கு எடுத்துக் கொள்ளுமாறு உத்திரவிடப்பட்டு இருக்கிறது; அதிலே பெரும்பாலும் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. நல்ல பாய்கள், சீர்காழி போன்ற இடங்களிலே உற்பத்தி செய்யப்படுகிற பாய்கள் அழகான பாய்களாக இருக்கின்றன. ஆங்காங்குள்ள கடைகளில் அவைகள் நல்ல விலையாகின்றன.